5. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

6. 1974-75-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 13,00,19,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. A. WAHAB : Sir, I move—

'That the allotment of Rs. 13,00,19,700 under Demand No. 11--District Administration be reduced by Rs. 100.'

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாவட்ட நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 13,00,19,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.